# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.
## S.C. 193/2023
## Prosecution Witness : 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. மனோஜ் படேல் | **Caste** | : | |
| **Father's Name** | : | திரு. ராம்ஜி படேல் | **Calling** | : | |
| **Village** | : | சென்னம நாயக்கன் பட்டி | **Religion** | : | இந்து |
| **Taluk** | : | திண்டுக்கல் | **Age** | : | **40** |
| | | | **Dated** | : | **27.11.2024** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**A1, A2 present. Both side counsels present.**

**பட்டியல் சாட்சி 2 திரு. மனோஜ் படேல் ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து சிவசக்தி ஷா மில் வைத்து வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அசா.1 எனது அண்ணன். மேற்படி வழக்கின் எதிரிகளில் 2-வது எதிரி எங்களிடம் ஏற்கனவே 2021ம் வருட தீபாவளிக்கு ரூ. 25,000/- முன் பணம் வாங்கி இருந்தார். அவர் எங்களிடம் ஏற்கனவே வேலை செய்து வந்தார். 30.11.2021 ம்தேதியிலும் அவர் வேலையில் இருக்கிறார். அன்றை தினம் அவரிடம் முன் பணம் என்ன ஆயிற்று என கேட்டேன். தருகிறேன் என்று சொல்லிவிட்டு சென்று விட்டார். 04.12.2021ம் தேதி மதியம் சுமார் 03.30 மணி அளவில் இரண்டு எதிரிகளும், நான் மில்லில் வேலை பார்த்துவிட்டு வெளியே வந்து கேட்டின் அருகே நிற்கும் போது, அங்கு வந்து சரணவனக்குமார் என்னிடம் ஏன்டா தேவிடியா மகனே எனது தங்கச்சியை வேலையை விட்டு நிப்பாட்டினாய், அதனால் எங்கள் தங்கை வீட்டில் பிரச்சனையாக இருக்கிறது. அது உன்னால் தானடா

என்று சொல்லிவிட்டு சரவணக்குமார் தனது இடுப்பில் இருந்த கத்தியை எடுத்து இதோடு செத்து தொலைடா என்று சொல்லி, எனது இடது பக்க கழுத்தின் மேலும், கீழும் வெட்டினார். அவருடன் இருந்த எதிரி கோவிந்த ராஜ், சரவணக்குமாரிடம் இருந்த கத்தியை பிடுங்கி மாறி மாறி எனது இடது பக்க கழுத்தில் அவருடம் வெட்டினார். அங்கு 6 இடத்தில் வெட்டுப்பட்டு இருந்தது. இதை பார்த்து எங்கள் அண்ணன் அசா.1 ஓடி வருவரை பார்த்து மேற்படி இருவரும் ஓடிவிட்டார்கள். அதன் பிறகு எங்கள் காரில் எடுத்து சென்று திண்டுக்கல் JCB மருத்துவமனையில் சேர்த்து, முதல் சிகிச்சை அளிக்கப்பட்டு மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். இது சம்பந்தமாக போலீசார் அப்பல்லோ மருத்துவமனையில் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

08.12.2021ம் தேதியில் நான் மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டேன். கோவிந்தராஜ்க்கு ரூ. 25,000/- கொடுத்தது சம்பந்தமாக போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால், அவர்கள் கேட்கவில்லை. முன் பணம் கொடுத்தற்கு ஆவணம் இல்லை. தீபாவளி எந்த தேதியில் வந்தது என்று ஞாபகம் இல்லை. எந்த தேதியில் முன் பணம் கொடுத்தேன் என்று எனக்கு தெரியாது. கோவிந்தராஜீக்கு நான் முன் பணம் கொடுத்தாக சொல்வது பொய் என்றால் இல்லை. சம்பவத்தன்று நான் மில்லின் கேட்டின் அருகில் நின்றதாக போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் அலறி சத்தம் போட்டு என் அண்ணன் வந்ததாக போலீஸ் விசாரணையில் சொல்லி இருக்கிறேன். எனக்கு தமிழ் எழுத, படிக்க தெரியாது. புகாரை என் அண்ணன் கொடுத்தார். எனக்கு இந்தி மற்றும் ஆங்கிலம் எழுத, படிக்க தெரியும். நான் மருத்துவமனையில் இருந்ததால் எப்போது சுய நினைவு வந்தது என்று என்னால் சொல்ல இயலாது. சம்பவம் நடந்த இடத்தில் வேறு கடைகள் இருக்கிறது. அவை பூட்டி இருந்தது. சம்பவ இட மெயின் ரோடு வத்தலக்குண்டு மெயின் ரோடு. அதில் பஸ் போக்குவரத்து அதிகம் உள்ளது. என் கடைக்கு சற்று தள்ளி பஸ் நிறுத்தம் இருக்கிறது. என் கடைக்கு அடுத்து

விநாயகா பெயிண்ட்டிங் ஹார்டுவேர் கடை உள்ளது. வத்தலக்குண்டு மெயின் ரோட்டிற்கு எதிரே கடைகள் உள்ளது. அவைகள் 100 அடிக்கு மேல் தள்ளி இருக்கும். சம்பவ இடம் ஆள் நடமாட்டம் உள்ள ஏரியா என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு பிறகு வேறு ஆட்கள் யாரும் அங்கு வரவில்லை. 25 ஆண்டுகளுக்கு மேலாக அந்த கடையை நடத்தி வருகிறோம். அதை நானும் என் அண்ணனும் சேர்ந்து பார்க்கிறோம். போலீஸ் விசாரணையில் 4 வருடங்களுக்கு முன்பு சக்தி குமாருக்கும், காளீஸ்வரிக்கும் பிரச்சனை ஏற்பட்டு, சக்திகுமார் மில்லுக்கு வரவில்லை என சொல்லி உள்ளேன் என்றால் இல்லை. அவர்கள் இருவரையும் 4 வருடங்களுக்கு முன்பே நிறுத்தி விட்டோம். காளீஸ்வரியை நாங்கள் வேலையை விட்டு நிறுத்தவில்லை என்றும், அவரது கணவர் சொல்லி தான் வேலைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. என்னை காரில் அழைத்து சென்று போது நிறைய பேர் காரில் வந்தார்களா என்றால் தெரியாது. நான் மயக்கமாக இருந்தேன். மருத்துவமனையில் 06ம் தேதி சுயநினைவு வந்த பிறகு தான் தெரியும். போலீஸ் விசாரணையில் 04.12.2021ம் தேதியில் வேலை முடித்து விட்டு வெளியே வந்து நின்றதாக தான் போலீஸ் விசாரணையில் சொல்லி இருக்கிறேன். அப்போது என்னுடன் யாரும் இல்லை என்றால் சரிதான். தற்செயலாக தான் வெளியே வந்து நின்று கொண்டு இருந்தேன். எதிரிகள் கத்தியால் என்னை வெட்டிய போது கையால் நான் தடுக்கவில்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் கத்தியால் (MO.1) வெட்டுவதால் ஏற்படாது என்றால் தவறு. சா.பொ. 1 ஐ பயன்படுத்தி எதிரிகள் என்னை வெட்டவில்லை என்றால் சரியல்ல. சா.பொ. 1ல் கைப்பிடி இல்லை என்பதால் அதை பயன்படுத்தி வெட்ட முடியாது என்றும், அது வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. எங்கள் மில்லில் 3 அல்லது 4 வருடங்களுக்கு முன் மில் வேலைகளை பெண்கள் செய்தார்கள். மேற்படி ஷா மில்லில் வேலை செய்யும் பெண்களிடம் தவறாக நடந்தாக எதிரிகள் செல்கிறார்கள் என்றால் கிடையாது. அதனால் அந்த பகுதியில் நிறைய பேரிடம் முன் விரோதம் இருக்கிறது என்றால் இல்லை. சம்பவம் நடந்த அன்று நான் திடீர் என காணாமல் போனதற்கு பெண்கள் சம்பந்தப்பட்ட விசயங்கள் தான் காரணம் என்றால் இல்லை. அவ்வாறு போன இடத்தில்

தான் அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டேன் என்றால் எதிரிகள் தான் தாக்கினார்கள். வேறு இடத்தில், வேறு சம்பவத்தில் ஏற்பட்ட காயங்களை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து இருக்கிறேன் என்றால் சரியல்ல. பெண்கள் விசயத்தில் நான் தாக்கப்பட்டது தெரிந்து விட்டால் குடும்ப மானம் போய்விடும் என்பதால் தான் இந்த பொய் புகாரை கொடுத்து இருக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் சொல்லிக் கொடுத்து எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

R KANAGARAJ
Digitally signed by R KANAGARAJ
Date: 2024.11.27 18:50:20 +0530